# தலைநிமிரும் தமிழக கிராமங்கள்


படிப்பறிவும் நவீன தொழில்நுட்பமும் சாலைப் போக்குவரத்து வசதியும் கிராமப்புற தமிழகத்தை மேம்படுத்திவருகின்றன. கம்ப்யூட்டர்களும் கார்களும் கிராம மக்களின் வசமாகின்றன.

ஆனந்த் நடராஜன்

தேனியிலிருந்து கும்பக்கரை கிராமத்திற்குச் செல்லும் வழியில் ஒரு குக்கிராமம். அதில் ஒரு ஓலைக் குடிசை வீடு. கூரையின் மேல்பரப்பில் டி.டி.எச் தொலைக்காட்சி ஒளிபரப்புக்கான ஆன்டெனா வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. நகர்ப்புறங்களின் அடுக்குமாடி குடியிருப்புகள், தனி பங்களாக்கள் போன்றவற்றில் மட்டுமே காட்சியளித்துக் கொண்டிருந்த இந்த டி.டி.எச் ஆன்டெனா இப்போது குக்கிராம குடிசை ஒன்றின் தலையில் முளைத்திருப்பது தமிழக கிராமப்புற வளர்ச்சியின் ஒரு அடையாளம். இந்த அடையாளம், தேனி மாவட்டத்தின் ஒரு குக்கிராமத்தில் மட்டும் தென்படவில்லை. இன்றைக்கு ஆயிரம் பேர் மட்டுமே வசிக்கும் ஒரு கிராமத்தில்கூட 84 சதவீதம் பேர் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி இருக்கிறது. 54 சதவீத கிராமவாசிகள் செல்போனைப் பயன்படுத்துகிறார்கள். தொலைபேசி பயன்படுத்துபவர்களின் சதவீதம் 71.

தமிழகத்தின் நிலப் பரப்பில் 55 சதவீதப் பகுதி கிராமப்புறங்கள்தான். இதில் மொத்தமாக 12,218 கிராமங்கள் இருக்கின்றன. இதில் பெரும்பாலான கிராமங்களில் கடந்த 10 வருடங்களில் அளப்பரிய மாற்றங்களும் வளர்ச்சியும் வளமையும் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியாவிலேயே கிராமங்கள் வேகமாக நகரமயமாவதிலும் நவீனமயமாவதிலும் தமிழகத்திற்குத்தான் முதலிடம். சாலை வசதிகள், பேருந்து, குடிநீர், அடிப்படை மருத்துவம் இல்லாத கிராமமே தமிழகத்தில் இல்லை எனலாம். இதற்கு பல காரணங்களைப் பட்டியலிட முடியும். இதில் அடிப்படையான காரணம், தமிழக கிராமங்களின் படிப்பறிவு, கல்வியறிவு விகிதம் அபாரமாக மேம்பட்டிருப்பதுதான். இந்த அடிப்படை கல்வி அறிவுதான் கிராமப்புற மக்களின் உயர்கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் உரிமைகளைப் பற்றி தெரிந்துகொள்வதற்கும் அவற்றை அடைவதற்குமான ஆதாரமாக இருக்கிறது.

குறிப்பாக பஞ்சாயத்துகளுக்கான அதிகாரங்களும் நிதி ஆதாரங்களும் மத்திய, மாநில அரசுகளின் பல கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களும் தமிழக கிராமப்புறங்களின் முகத்தை அடியோடு மாற்றியிருக்கின்றன. பெண் கல்வியும் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வளர்ச்சியும் கிராமப்புற வளர்ச்சிக்கு உதவும் பிற காரணங்கள்.





**சாலை இணைப்புகளும் கிராமப்புற தொழில்கள் மூலம் கிடைக்கும் அபரிமித வருமானமும் தமிழக கிராம மக்களை சொகுசு கார்களிலும் பவனி வர வைத்திருக்கின்றன.**

குறிப்பாக தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், தமிழகத்தில் 33.456 லட்சம் கிராமப்புற குடும்பங்கள் பயன்பெற வைத்திருக்கிறது. இந்தத் திட்டத்தில் பயனடையும் மொத்த பயனீட்டாளர்களில் 78 சதவீதத்தினர் பெண்கள்.

தமிழகத்தில் கிராமப்புறச் சாலைகளை அருகில் இருக்கும் தேசிய நெடுஞ்சாலைகள், பிரதான சாலைகள் மற்றும் நகர்ப்புறங்களோடு இணைத்திருப்பதும் கிராமப்புற வளர்ச்சிக்கு இன்னொரு முக்கிய காரணம். இந்தியாவிலேயே மிக நீளமான சாலைகளைக் கொண்ட மாநிலம் தமிழகம்தான். இந்தச் சாலைகளும் தகவல்தொடர்பு அம்சங்களும் அதற்கான தொழில்நுட்பங்களும்தான் கிராமங்களை சொர்க்கபுரியாக மாற்றி வருகின்றன. தொலைக்காட்சி வழியாக வரும் செய்திகள், நாட்டு நடப்புகளும் அரசியல் விவாகாரங்களும் கிராமப்புற மக்களுக்கு பெரும் விழிப்புணர்வைத் தந்து வருகின்றன. பஞ்சாயத்து கம்ப்யூட்டர்கள், இணையங்கள் மூலமாக கிராம மக்கள் தங்கள் தொழில் சார்ந்த தகவல்களை உடனுக்குடன் அனுப்பி பெற முடிவது அதை லாபகரமானதாக ஆக்கியிருக்கிறது. மின் நிர்வாகம் அரசுத் துறை விவகாரங்களில் ஏற்படும் கால விரயத்தைக் குறைத்து அதற்கான செலவுகளையும் கட்டுப்படுத்தி வருகிறது. இதுவும் ஒரு வகையில் கிராமப்புற வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறது. மொபைல் போன்களின் வரவும் அதன் வளர்ச்சியும் கிராமப்புற தமிழகத்தின் வளர்ச்சியை பிரம்மாண்டமானதாக ஆக்கியிருக்கிறது. தொழில்நுட்பப் புரட்சி தனி நபர்கள், கிராமப்புற கல்வி, விவசாயம், கிராமப்புற தொழில்கள் போன்றவற்றை மேம்படச் செய்து அதன் மூலம் கிராமப்புற மக்களின் தரத்தையும் உயர்த்தி வருகின்றன. கிராமப்புற விவசாயிகள் நகர்ப்புற சந்தைகளில் தங்கள் விளைபொருட்களுக்கான டிமாண்ட், விலை போன்றவற்றை நொடியில் தெரிந்து அதற்கேற்ப விற்பனையைத் திட்டமிடுகிறார்கள். விவசாயி அல்லது பால் கறப்பவருக்கு செல் பேசிதான் வர்த்தகத் தலம். தானிருக்கும் இடத்திலேயே இருந்துகொண்டு நகர்ப்புறங்களில் அவரால் வர்த்தகம் செய்ய முடிகிறது. இன்றைக்கு ஒரு கிராமப்புற சிறு விவசாயிக்கு இரு சக்கர வாகனம் என்பது சர்வ சாதாரண விஷயம். பெரிய விவசாயி கார் வாங்கத் தயங்குவதில்லை. பண்ணை விவசாயிகளும் பெரும் விவசாயிகளும் உள்நாட்டுச் சொகுசு கார்கள் போக, பி.எம்.டபிள்யூ போன்ற வெளிநாட்டு சொகுசு கார்களையும் வாங்கி அதில் பவனி வருகிறார்கள். கடந்த பத்தாண்டுகளில் கிராமப்புற சந்தை பிரம்மாண்டமாக வளர்ச்சியடைந்திருக்கிறது. தமிழகத்தில் 50 சதவீத சந்தைப் பொருளாதாரம் கிராமங்களை குறி வைத்துத்தான் நடக்கிறது.

மத்திய, மாநில அரசுகளின் வாக்கு வங்கி சார்ந்த ஜனமயக்குத் திட்டங்களும்கூட கிராமப்புற இந்தியாவை அபாரமாக மாறியிருக்கின்றன. மத்திய அரசு கடந்த வருட பட்ஜெட்டில் விவசாயத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கியது. அதோடு அடிப்படை கட்டமைப்பு துறையில் கூடுதல் முதலீடும் நெடுஞ்சாலைகள் அமைக்கும் திட்டத்திற்கு 23 சதவீத கூடுதல் நிதியும் ஒதுக்கியது. இது கிராமப்புற வளர்ச்சியைத் தூண்டி வேகமெடுக்கச் செய்திருக்கிறது. குறிப்பாக, தமிழகத்தில் இலவச கலர் டிவி திட்டம், கிராமப்புற சாலை இணைப்பிற்கு 1,200 கோடி ரூபாய் ஒதுக்கீடு, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடந்த 3 ஆண்டுகளில் 6,000 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டது ஆகியவை கிராமங் களை தன்னிறைவு பெறச் செய்து வருகின்றன.

காந்தி கண்ட கிராம சுயராஜ்ஜிய கனவு மெல்ல நிறைவேறி வருவதுபோலத் தோன்றலாம். ஆனால், இந்தக் கிராமப்புற வளர்ச்சியும் நகர்ப்புற வளர்ச்சியைப் போலவே சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதாக இல்லை. அதே நேரத்தில் அனைவரையும் உள்ளடக்கிய சமச் சீரான வளர்ச்சியை அடையும் காலமும் வெகுதூரத்தில் இல்லை. ■

# கிராமப்புற இந்தியாவின் புதிய முகம்

இந்தியாவின் பெரும்பாலான கிராமப்பகுதிகள் பத்தாண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட பெருமளவு மாறியிருக்கின்றன. பல்வேறு காரணங்களால் கார் முதல் கணினி வரை செல்வச் செழிப்பும், நகர்ப்புற பகட்டும் வந்து சேர்ந்திருக்கின்றன.

திலிப் பாப்

பஞ்சைப் பராரியான கிராமமக்கள், வீங்கிய வயிறு கொண்ட குழந்தைகள், கிழிந்த கந்தலான உடைகள், கொடுமையான எதிர்காலத்தை நினைவுக்குக் கொண்டு வரும் வறண்டு பாளம்பாளமாய் வெடித்த வயல்கள் ஆகியவற்றை இனிமேல் மறந்து விடுங்கள். நாட்டில் வறுமை தாண்டவமாடும் தீவுகள் இன்னமும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் கிராமப்புற இந்தியாவின் பெரும் பகுதி பல்வேறு காரணங்களால், கற்பனைக்கு எட்டாத வகையில் உருமாறியுள்ளது. இதனால் நாடு முழுவதும் விவசாயிகளின் கைகளில் செழிப்பு சென்று சேர்ந்திருக்கிறது. அது மிகப் பெரிய நுகர்வு சந்தையாகவும் மாறி இருக்கிறது. பொருளாதார மந்த நிலையால் விவசாய வளர்ச்சியும் கிராமப்புற வருவாயும் பெருமளவு பாதிக்கப்படாமல் இருக்கின்றன என்று சமீபகால புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வளவுக்கும் மொத்த கிராமப்புற வருவாயில் விவசாயத்தின் பங்கு குறைந்து வந்திருக்கிறது. இதற்கு பதிலாக வளர்ந்து வரும் சேவைத் துறையிலும் மாற்று வருவாய் வழிமுறைகளான தோட்டக் கலை, கால்நடை பண்ணை, மீன்வளர்ப்பு உள்ளிட்ட இதர வாய்ப்புகளையும் விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். குறைந்த அளவு மழையை சார்ந்திருக்கிற இந்தத் தொழில்கள் பத்தாண்டுகளுக்கு முன்பு இருக்கவில்லை. இந்தியாவிலுள்ள 6,38,000 கிராமங்களில் 72.2 சதவீத மக்கள் வாழ்கின்றனர். ஒரு காலத்தில் வெளியுலகை எட்டிப் பார்க்காத இந்த கிராமங்கள், இன்றைக்கு தங்கள் எதிர்காலத்தை சுட்டிக்காட்டும் வழிகாட்டிப் பலகைகள் போல இருக்கின்றன.

இதை புதிய சாகசம் என்றோ, தொழில்முனைவின் வெளிப்பாடு என்றோ குறிப்பிடலாம். பெரும்பாலான விவசாயிகள் புதிய பயிர்கள், புதிய தொழில்நுட்பத்துக்குத் தாவியதன் காரணமாக லாபம் அடைந்திருக்கிறார்கள். மதுரை தேனிக்கு அருகேயுள்ள வள்ளியம்மாள்புரத்தைச் சேர்ந்த தவமுருகனை பயிரை மாற்றி பயிரிட்டதால் லாபமடைந்த விவசாயிக்கு உதாரணமாகச் சொல்லலாம். வழக்கமாக




**மிருத்யுஞ்சய் ஷர்மா**
விவசாயி
உத்தரப் பிரதேசம்

பாரபங்கி பகுதியில் உள்ள சந்தௌலி கிராமத்தைச் சேர்ந்த இவர், எண்ணெய் எடுக்க புதினா பயிரிட்டு அதிக லாபம் கிடைத்ததால் ஓராண்டுக்கு முன் வாங்கிய மாருதி ஸ்விப்ட் காருக்கு பதிலாக ஹோண்டா சிட்டி காரை வாங்க வேண்டுமென்று நினைக்கிறார். ஏற்றுமதி செய்யப்படும் இந்த எண்ணெய் ஒரு லிட்டர் ரூ. 500 முதல் ரூ. 575 வரை விற்கிறது. இந்த மாவட்டத்தின் அடித்தட்டு பொருளாதாரத்தை இது புரட்டிப் போட்டுள்ளது.

மனீஷ் அக்னிஹோத்ரி/www.indiatodayimages.com

தேயிலை, காபி, மிளகு அல்லது கரும்பு பயிரிட்டு வந்த அவர், அவற்றுக்குப் பதிலாக திராட்சை பயிரிட ஆரம்பித்தார். ஆண்டு முழுவதும் திராட்சை விளைவிப்பதற்கு ஏற்ற வகையில் தேனியின் தட்பவெப்ப நிலை இருக்கிறது. தற்போது ஓராண்டுக்கு இங்கே 10,000 டன் தாம்சன் விதையற்ற திராட்சை விளைவிக்கப்படுகிறது. "தாம்சன் திராட்சைகளின் உலகத் தலைமையகம் போல் தேனி மாறிவிட்டது. எங்கள் விவசாயிகள் உலகச் சந்தையில் போட்டியிடுகிறார்கள்" என்கிறார் தவமுருகன். அதிநவீன கணினி, டிரெட்மில், டொயோட்டா இன்னோவா கார் ஆகியவற்றை அவரது பண்ணை வீட்டில் காணமுடிகிறது.

நாசிக் மாவட்டத்தில் உள்ள நயாகாவ்னைச் சேர்ந்த விவசாயி சுனில் கட்கடே மற்றொரு உதாரணம். தன் குடும்பத்துக்கே போதாத அளவு கோதுமை, கம்பு பயிரிட்டு வந்த அவர், நான்கு ஆண்டுகளுக்கு முன் தெளிப்பு நீர் பாசன முறையை நிறுவி, காய்கறி பயிர் இட்டார். ஒரு ஏற்றுமதியாளருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, தற்போது ஆண்டுக்கு ரூ. 6லட்சம் சம்பாதிக்கிறார். உணவுப் பொருட்களின் விலை ஏற்றம் நகர்ப்புற நுகர்வோரின் கையை கடிக்கலாம். ஆனால் அது விவசாயிகளின் வருமானத்தை கிட்டத்தட்ட மூன்று மடங்கு பெருக்கி, செழிப்பை கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. கட்கடேயின் புதிய வீடு நகர்ப்புற மத்திய தர வர்க்கத்தினரின் வீட்டிலுள்ள வசதிகளைப் பெற்றிருக்கிறது.

**புதிய கண்டுபிடிப்புகள்** பயிர்களை மாற்றி பயிரிடுவது தவிர, அதிநவீன விவசாய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது மகசூலை அதிகரிக்கிறது, புதிய தொழில்முனைவை ஊக்குவிக்கின்றன, சமூக ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தெலுங்கானா பகுதியில் உள்ள முர்தாடைச் சேர்ந்த எலால சீனிவாஸுக்கு (32) சொந்தமாக நான்கு ஏக்கர் நிலமே உள்ளது. ஆனால் தற்போது சொட்டு நீர் பாசன கருவிகளையும் குறு பாசன நுட்ப வசதியையும் அவர் விற்பனை செய்து வருகிறார். அவரது வருமானம் உயர்ந்திருக்கிறது, ஆல்டோ கார் வாங்கியிருக்கிறார், இதுமட்டுமல்லாமல் தனது படிப்பை முடிக்கவும் அவர் விருப்பப்படுகிறார். "நவீன பயிர்வளர்ப்பு முறைகள் பற்றி விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குவது உள்ளூர் பொருளாதார வளர்ச்சிக்கும், எனது தொழிலுக்கும் உதவியாக இருக்கிறது" என்கிறார் சீனிவாஸ்.


விவசாயத்தை ஒரு லாபகரமான தொழிலாகக் கருதுவதும் பெரும் குறிக்கோள்களை நோக்கி பயணிப்பதும் முர்தாட் பகுதியில் பரவலாகி வருகிறது. 14,000 பேர் வாழும் இப்பகுதியில் இருக்கும் 3,500 இரு சக்கர வாகனங்கள், 20 கார்கள், 32 டிராக்டர்கள் இயங்காமல் இருக்கும் நேரம் குறைவுதான். கிராமப்புற தெலுங்கானாவில் அபூர்வமாக காணக்கிடைக்கும் காங்கிரீட் கூரைகள், நவீன சமையலறைகள், எரிவாயு அடுப்புகள் போன்றவற்றை இங்கு பெரும்பாலான வீடுகளில் காண முடிகிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு இவற்றைப் பற்றி கனவுகூட கண்டிருக்க முடியாது. நாட்டின் மொத்தத் தேவையில் 70 சதவீத சிவப்பு சோள விதைகள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டு, பின்னர் விதை நிறுவனங்களுக்கு விற்கப்படுகின்றன. உள்ளூர் பொருளாதாரத்தில் இது ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறிப்பிடத்தக்கது. 25,000 விவசாயிகள் நேரடியாக வேறு 25,000 குடும்பங்களுக்கு வேலை வழங்கி வருகிறார்கள். செல்போன், நவீன டிசைன் சட்டைகளை அணிந்துள்ள இப்பகுதி இளைஞர்கள் வேலை தேடி நகரங்களுக்கு இடம்பெயர்வதும் இல்லை.

சோளம் காசு மழை பொழிவது மட்டுமில்லாமல், ஏற்கெனவே ஸ்திரமடைந்துவிட்ட விதிமுறைகளை கிராமப்புற சந்தை எப்படி மாற்றும் என்பதற்கும் இது சிறந்த உதாரணம். 1980களில் இந்தப் பகுதி விவசாயிகளிடம் இருந்து விளைச்சலை வாங்கிக் கொள்வதற்கான உத்தரவாதத்தை விதை நிறுவனங்கள் வழங்கின. "அந்தப் பரிசோதனை மிகப் பெரிய வெற்றியை தேடித் தந்துள்ளது" என்கிறார் சிவப்புச் சோள உற்பத்தியாளர் எனுகு கங்காராம் (45). இங்கு ஓராண்டுக்கு 50,000 ஏக்கரில் நான்கு லட்சம் குவிண்டால் விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் காரணமாக 35 விதை நிறுவனங்கள் இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. விதைகள் இங்கு உற்பத்தியாகி, பதப்படுத்தப்படுவது மட்டுமின்றி பாகிஸ்தான், வங்கதேசத்துக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்கிறார் ஆந்திரப் பிரதேச மாநில விதைக் கழக இயக்குநர் பல்லே கங்கா ரெட்டி. கணிப்புகளின்படி, ஒவ்வொரு விவசாயியும் ஓராண்டுக்கு ரூ. 5 லட்சம் வருமானம் ஈட்டுகிறார். "கடுமையான உழைப்பு, புதிய கண்டுபிடிப்புகள் மூலம் பெரும் செழிப்பை உருவாக்குபவர்களாக இவர்கள் மாறி இருக்கிறார்கள்" என்கிறார் மாவட்ட ஆட்சியர் பி. சீதாராமானேஞ்ஜுலு.

அப்படியே உத்தர பிரதேச மாநிலம் பாரபங்கி பகுதியில் உள்ள சந்தௌலி கிராமத்துக்குச் சென்றால், அங்கு மிருத்யுஞ்சய் ஷர்மா (42) பணத்தை அறுவடை செய்து வருகிறார். மாருதி ஸ்விஃப்ட் காருக்கு பதில், ஹோண்டா சிட்டி காரை வாங்க வேண்டும் என்று நினைக்கிறார். "முன்பெல்லாம் கோதுமையும் நெல்லும்தான் பயிரிட்டு வந்தோம். புதினா எண்ணெய் எடுப்பதற்காக புதினா பயிரிட்ட பின்தான் இவ்வளவு லாபம் கிடைக்க ஆரம்பித்தது" என்கிறார் அவர். இந்தியா இந்த எண்ணெயை பெருமளவு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்து வருகிறது. பருவமழைக்கு தயார் செய்வதற்காக நிலத்தை உழாமல் இருக்கும் மார்ச்-ஜூன் மாதங்களில் இது பயிரிடப்படுகிறது. பாரபங்கி பகுதியைச் சுற்றி நூற்றுக்கணக்கான மென்தால் தொழிற்சாலைகள் சரசரவென முளைத்துவிட்டன. "மருந்து, பற்பசை, அழகுக்கலைப் பொருட்களில் பயன்படுத்தப்படும் இந்த எண்ணெய் ஒரு லிட்டர் உற்பத்தி செய்தால் விவசாயிக்கு ரூ. 500 - 575 கிடைக்கிறது. ஒரு ஏக்கர் நிலம் மூலம் மூன்று மாதங்களில் 40 லிட்டர் புதினா எண்ணெயை உற்பத்தி செய்யலாம். இதனால் மாவட்டத்தின் பொருளாதாரம் தலைகீழாக புரட்டி போடப்பட்டுள்ளது" என்கிறார் ஷர்மா.

மத்தியப் பிரதேசத்திலோ அது சோயா பீனாக இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு குவிண்டால் ரூ. 1,600 ஆக இருந்தது. தற்போது அதன் விலை குவிண்டாலுக்கு ரூ. 2,800. ஒரு விவசாயி 200 குவிண்டால் சோயா பீன் மகசூல் செய்தால், கிட்டத்தட்ட ரூ. 2.50 லட்சம் வருமானம் கிடைக்கும்.

**தொழில்நுட்ப ஆட்சி** இப்பொழுது கிடைத்து உள்ள இந்த புதிய செழிப்புக்கு முக்கிய காரணம் நல்ல பயண வசதிகளும் தொடர்புகொள்வதற்கான புதிய வழிமுறைகளும்தான். கிராமப்புற சாலைத் திட்டங்கள் மூலம் தங்கள் உற்பத்தியை விவசாயிகள் வேகமாகவும் எளிதாகவும் சந்தைக்கு கொண்டு செல்ல முடிகிறது. அதேநேரம் தொடர்புகொள்வதற்கான வசதிகள் மூலம் தட்பவெப்பநிலை தகவல்கள், முக்கிய தகவல்களைப் பெற முடிகிறது. ஐ.டி.சி நிறுவனத்தின் *இ-சௌபால்* திட்டம் மூலம் 35 லட்சம் விவசாயிகள் புதிய பயிர் வகைகள், விலை, சந்தை விவரங்களை உடனடியாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. பெங்களூருவுக்கு அருகேயுள்ள சிறு கிராமமான பெல்லாந்தூரைச் சேர்ந்த கே.பி. ரெட்டி கையில்


ஷ்ரியா பாட்டீல் ஷிண்டே/www.indiatodayimages.com

**சுனில் கட்கடே**
விவசாயி
மகாராஷ்டிரா

நாசிக் அருகேயுள்ள நயாகாவ்னைச் சேர்ந்த கட்கடே தனது வயலில் தெளிப்பு நீர் பாசனத் திட்டம் மூலம் காய்கறி, வெங்காயம் பயிரிடத் தொடங்கியதில் இருந்து வாழ்க்கை மாறிவிட்டது. மகசூலும் வருமானமும் அமோகமாக இருந்ததால் ஜீப்பும் கூடுதல் நிலமும் வாங்கியுள்ளார்.

ஏ. பிரபாகர் ராவ்/www.indiatodayimages.com


**தீகலா ரமேஷ் ரெட்டி**
விவசாயி
ஆந்திரப் பிரதேசம்

ஒரு காலத்தில் தெலுங்கானா பகுதியில் உள்ள முர்தாட் கிராமத்தில் உள்ள 13 ஏக்கர் வறண்ட நிலத்தில் வெயிலில் வெந்து கொண்டிருந்த இவர், சிவப்புச் சோளம் பயிரிடத் தொடங்கி, விதை வங்கியை உருவாக்கிய பின் எங்கேயோ போயிருக்கிறார். தற்போது ஆல்டோ காரில் வளைய வரும் அவர், கலிபோர்னியாவில் படித்து அமெரிக்க ஐ.டி நிறுவனத்தில் வேலை பார்த்து வரும் மகள் ரமணியுடன் செல்போனில் உரையாடுகிறார்.

## காலஹண்டி எப்படியிருக்கிறது?

இருளடர்ந்த கிராமப்புற இந்தியாவின் அடையாளமாக இருந்தது ஒரிசாவின் காலஹண்டி. 1985ஆம் ஆண்டு வெறும் ரூ. 40க்கு ஒரு குழந்தை விற்கப்படும் அளவுக்கு அந்த ஊரின் நிலைமை மோசமாக இருந்தது. அங்குள்ள அம்லபள்ளி கிராமத்தைச் சேர்ந்த பனாஸ் பஞ்சி தனது இரண்டு குழந்தைகள் பட்டினியால் இறப்பதைத் தடுக்க, இரண்டு வயது நாத்தனர் வனிதாவை அப்போது விற்றிருந்தார். இந்த பெருந்துயரக் கதையால் அதிர்ச்சியடைந்த மத்திய, மாநில அரசுகள் தொடர்ச்சியாக பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அங்கு அமல்படுத்தின. கடந்த எட்டு ஆண்டுகளில் காலஹண்டிக்கு வளர்ச்சி நிதியாக ரூ. 30 கோடி தரப்பட்டுள்ளது. இன்றைக்கு வனிதா நல்ல சேலையும் தங்க மூக்குத்தி, தோடும் அணிந்திருக்கிறார். உள்ளூர் அங்கன்வாடியில் பணிபுரியும் அவர் ரூ. 500 சம்பளம் பெறுகிறார். அவரைப் போன்று வறுமையில் உழல்பவர்களுக்கு வீடு கட்ட ரூ. 9,000மும், கிணறு அமைக்க ஜீவாதார திட்டத்தின் கீழ் ரூ. 13,000மும் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள 20 வீடுகள் மின் வசதியும் 15 வீடுகள் டிவி பெட்டிகளையும் பெற்றுள்ளன. சூரியசக்தி மின்கோபுரம் இருக்கிறது. 40 சதவீத நிலம் நிரந்தர பாசனத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் இந்தியாவின் முகத்தில் மிகப் பெரிய கறையாக இருந்த காலஹண்டி, இன்று நம்பிக்கை ஒளிர காட்சி அளிக்கிறது.

*ஃபர்சாந்த் அகமது*

புதிய பயிர்களுக்கு மாறுவது செழிப்பை கொண்டு வந்து சேர்க்கிறது. தற்போது தாம்சன் திராட்சையைப் பயிரிட்டு வருவதன் மூலம் உலகச் சந்தையில் போட்டி போடுகிறது தேனி அருகேயுள்ள வள்ளியம்மாள்புரம் கிராமம்.



மடிக்கணினியுடன் (லேப்டாப்) வளைய வருகிறார். சமூக சேவை செய்யும் இந்த விவசாயி, இணையத் தொடர்பு மூலம் விவசாயிகள் நிலப் பத்திரத்தைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக போராடியவர். இதன் காரணமாக நிலத் தகராறுகள் குறைந்துள்ளன, விவசாயிகளுக்கு தங்கள் வைத்துள்ள நிலத்தின் உண்மையான மதிப்பு தெரிகிறது.

மேற்கு வங்கத்தில் உள்ள வர்த்தமான் மாவட்டம் தான் நாட்டிலேயே முழுமையான இணையதளத் தொடர்புள்ள ஒரே மாவட்டம். இந்த மாவட்டத்தில் வீடியோ கான்பரன்சிங் மூலம் ஊராட்சிகள் விஷயங்களைப் பகிர்ந்து கொள்கின்றன. மத்திய அரசின் மின் ஆளுமை திட்டத்தின் கீழ் மாநில அளவிலான பகுதி தொடர்புத் திட்டத்தின் மூலம் நடைமுறைப் படுத்தப்படும் இந்த வலைத்தொடர்பு அன்றாட நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள உதவுகிறது. இங்கு உள்ள மேமாரி போன்ற நகராட்சிகள் இளைஞர்களுக்கும் இளம்பெண்களுக்கும் பயிற்சி அளிக்க கணினி பள்ளியை தொடங்கியுள்ளன.

கிராமப்புற இந்தியா எவ்வளவு தூரம் மாறியிருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ள ஆந்திர பிரதேசம் நிஜாமாபாத் மாவட்டத்தில் உள்ள அங்க்சபூருக்குச் செல்ல வேண்டும். அரண்மனை போன்ற வீடுகளையும் அகலமான சாலைகளையும் இந்த கிராமத்தில் எதிர்கொள்ள முடியாது. இங்கு உள்ளூர்வாசிகளை விடவும் இடம்பெயர்ந்த தொழிலாளர்களே அதிகம் இருக்கிறார்கள். திறன்மிக்க நீர் மேலாண்மைத் திட்டத்தையும் பல்வேறு பணப்பயிர்களை பயிர் இடும் பழக்கத்தையும் கொண்டுள்ள இந்த விவசாயிகளிடம் இருந்து அவர்கள் அதிக சம்பளம் பெறுகிறார்கள். அதிக மகசூலை சமாளிக்கும் வகையில் ஒவ்வொரு விவசாயியும் சராசரியாக தனக்குக் கீழ் நான்கு விவசாயக் கூலித்தொழிலாளிகளை வைத்து இருக்கிறார். இங்கு வாழும் 600 விவசாயிகளும் இரு சக்கர வாகனம் வைத்திருக்கிறார்கள், ஆறு பேரில் ஒருவர் கார் வைத்திருக்கிறார். இந்த கிராமத்தில் உள்ள 2,000 ஏக்கர் நிலத்தில் பயிரிடும் அங்க்சபூர் விவசாயிகள், போதாததற்கு அண்டை கிராமங்களில் இருந்து 1,500 ஏக்கர் நிலத்தை வாங்கியிருக்கிறார்கள். “நீராதார மேம்பாட்டிலும் திட்டமிடலிலும் ஒரு தலைமுறை விவசாயிகள் கவனம் செலுத்தியதால் இது சாத்தியமானது” என்கிறார் விவசாய நிபுணர் பி.கங்காராம். சொட்டு நீர் பாசனம் போன்ற நவீன நீர் மேலாண்மை நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் ஆண்டுக்கு மூன்று போக விவசாயமும் ரூ. 10 - 15 லட்சம் வருமானமும் பார்க்க முடிகிறது. சுற்றுவட்டாரத்தில் இவர்கள் பெறும் மகசூல் 30 சதவீதம் அதிகம், தரமும் உயர்வு. இன்றைக்கு அங்க்சபூரின் விவசாய உற்பத்தியின் மதிப்பு ஆண்டுக்கு ரூ. 30 கோடி.

இதே வெற்றிக் கதை குஜராத்தில் உள்ள மெஹ்சானா மாவட்டத்தில் உள்ள ஃபதேபுராபில்வாயில் எதிரொலிக்கிறது. இந்த ஊரின் மக்கள்தொகை ஆயிரம்தான். ஆனால் ஆக்கபூர்வமான வளர்ச்சி என்று பார்த்தால், இந்த ஊர் பெரும்பாலான இந்திய கிராமங்களைவிட முன்னணியில் இருக்கிறது. மாறி வரும் கிராமப்புற இந்தியாவின் முகத்தை இது தெளிவாகக் காட்டுகிறது. எல்லா வீடுகளிலும் டிவி பெட்டி, குளிர்பதனப் பெட்டி, சில வீடுகளில் சலவை எந்திரம், ஏ.சி இருக்கின்றன. இந்த கிராமத்தின் மையப் பகுதியில் இருக்கும் பால் சேகரிப்பு நிலையத்துக்கு, ஜீன்ஸ், டிராக் சூட் அணிந்த கிராமத்து இளம்பெண்கள் பால் கேன்களை சுமந்து செல்லும் காட்சியை ரொம்ப சாதாரணமாகப் பார்க்கலாம். இந்த பால் தொழிற்சாலையை நிர்வகிக்கும் கிராம பால் கூட்டுறவு சங்கம், தினசரி 4,800 முதல் 5,500 லிட்டர் பாலை சேகரித்து அருகிலுள்ள நகரங்களில் விற்கிறது. பால் வீணாவதைத் தடுக்க, இந்த சங்கம் 2006ஆம் ஆண்டு ரூ. 13 லட்சம் கடன் வாங்கி பால் குளிரூட்டும் நிலையத்தை நிறுவியது. 2001 நிலநடுக்கத்துக்குப் பிறகு இந்த கிராம மக்கள் மழையை நம்பாமல், சொட்டு நீர் பாசன உதவியுடன் தோட்டக் கலையில் கவனம் செலுத்தியதால் பெரும் செழிப்பை அடைய முடிந்திருக்கிறது.

**கிராமப்புற நிலப்புரட்சி** கிராமப்புற இந்தியாவில் பெருமளவு பணம் புழங்குவதற்கு மிக முக்கியமான காரணம் நிலத்தை விற்பனை செய்வதால் கிடைக்கும் அதிகபட்ச விலைதான். பெல்லாந்தூரின் செழிப்புக்கு இதுவும் ஒரு காரணம். அதிவேகமாகப் பெருகி வரும் பெங்களூருவின் ஐ.டி நிறுவனங்களுக்குத் தேவையான அலுவலகம், குடியிருப்பு வளாகங்கள் கட்டுவதற்காக உள்ளூர் விவசாயிகள் தங்களது பெருமளவு நிலத்தை விற்பனை செய்துள்ளனர். நில விற்பனை மூலம் பெரும்பாலான கிராம மக்கள் திடீர் பணக்காரர்கள் ஆகியிருக்கிறார்கள். இந்த ஊரின் கோபால ரெட்டி, கிராம கோயில் கோபுரம் கட்ட ரூ. 25 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளார்.

ஹரியானாவுக்கு அருகே குர்காவ்னுக்கு அருகே உள்ள கட்டா கிராமமும் இதற்கு நல்ல உதாரணம். சுஷாந்த் லோக் பகுதியில் உள்ள 300 சதுர மீட்டர் நிலத்தில் அரண்மனை போன்ற வீட்டில் விவசாயி ஓம்பிரகாஷ் இன்று வாழ்ந்து வருகிறார். கடந்த ஆண்டு ஒரு தனியார் பில்டரிடம் தனது ஒரு ஏக்கர் நிலத்தை விற்றதன் மூலம் அவருக்கு ரூ. 3.50 கோடி கிடைத்தது. கிராமமக்களின் வருவாயில் ஏற்பட்டுள்ள இந்த மிகப்பெரிய தாவல், அவர்களது வாழ்க்கைத் தரத்திலும் பிரதிபலிக்கிறது. அங்கு ஃபோர்ட் என்டவர், ஸ்கோடா, ஸ்கார்பியோ கார்கள் ஒன்றுடன் ஒன்று உரசிச் செல்கின்றன. பிரகாஷ் இன்னமும் வீட்டில் சமைக்கப்பட்ட உணவை விரும்பினாலும், பெரும்பாலான கட்டா கிராம இளைஞர்கள் பொழுதை போக்கும் குர்காவ்ன் மால்களில் பர்கர்களை சாப்பிடவே அவருடைய மகன்கள் விரும்புகிறார்கள்.

பஞ்சாபின் தோலா கிராமத்தில் உள்ள இக்பால் சிங்கின் முற்றத்தில் இரண்டு எருமை மாடுகளும், ஒரு பசுவும் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்களது பெரிய ஃபிளாட் டிவி வைக்கப்பட்டிருக்கும் அறையில் ஸ்பிலிட் ஏ.சி ஓடிக் கொண்டிருக்கிறது. அவர்களது கிடங்கில் ஸ்கார்பியோ, யுண்டாய் அசென்ட் கார்கள் நிற்கின்றன. இந்தக் குடும்பம் தன்னிடம் இருந்த 40 ஏக்கர் நிலத்தை டிராக்டர் நிறுவனம் ஒன்றுக்கு விற்றது. பெரும் ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் கால்பதித்து வரும் பஞ்சாப் மாநிலம் முழுவதும், நிலத்தின் விலை விண்ணை முட்டி வருகிறது. ஆனால் இது எல்லாமே நல்லதுக்குத் தான் என்று சொல்லிவிட முடியாது. நிலத்தை விற்று பெற்றோர்கள் பெற்றுக்கொள்ளும் பணத்தை கிராமப்புற இளைஞர்கள் தாராளமாகவும் வீணாகவும் செலவு செய்கிறார்கள் என்று சமூகவியலாளர்கள் நம்புகிறார்கள். “கிராம மக்கள் நகர்ப்புற வாழ்க்கை முறையை பிரதி செய்ய ஆரம்பிப்பது, சமூகவியல் நெருக்கடிகளுக்கு இட்டுச் செல்லும்” என்கிறார் சமூகவியல் பேராசிரியர் மன்மோகன் சிங் கில்.

**நிதி கிடைக்கும் தன்மை** திருவனந்தபுரத்தின் புறநகர் பகுதியில் உள்ள சாந்திவிளை கிராமத்தில் இருக்கும் காய்கறிச் சந்தையில் நீங்கள் பார்க்கும் பெண்கள் சற்று காரமாக இருக்கக்கூடும். இந்த 16 பெண்கள் உள்ளூர் பொருளாதாரத்தை புரட்டிப் போட்டுள்ளனர். அரசின் வறுமை ஒழிப்புத் திட்டமான குடும்பஸ்திரீயின் திட்டத்தில் பதிவு செய்து கொண்டுள்ள இவர்கள், காருண்யா என்ற பெண்கள் சுயஉதவிக் குழுவாக இணைந்து செயல்படுகின்றனர். 2007ஆம் ஆண்டு இவர்கள் சுயஉதவிக் குழு தொடங்குவதற்கு முன் வரை யாரும் எந்த வேலையும் செய்யவில்லை. அவர்களுக்கு உள்ளூர் காய்கறிச் சந்தையில் இடமும் ஒரு லட்ச ரூபாய் அடிப்படை முதலீட்டையும் ஊராட்சி கொடுத்திருக்கிறது. அத்துடன் வங்கிக் கடன் பெற்று காகித அட்டைகள், துணிப்பைகள், ஆஃபீஸ் ஃபைல், பேனா, பென்சில் தயாரிப்பில் இறங்கினர். குடும்பஸ்திரீ இயக்கம் அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்பப் பயிற்சியை அளித்தது. இன்றைக்கு காருண்யா தயாரிப்புகள் மிகப் பிரபலமாக உள்ளன. இவர்களது சூழலுக்கு இணக்கமான காகித ஃபைல், காகித அட்டைகளுக்கான தேவை அதிகரித்து வருகிறது. “நாங்கள் ஒவ்வொருவரும் மாதத்துக்கு ரூ. 2,000 சம்பாதிக்கி



எஸ். செந்தில்குமரன்

**எஸ்.பி. பழனியாண்டி**
விவசாயி
தமிழ்நாடு

தேனி - கூடலூர் மெயின் ரோட்டில் கிட்டத்தட்ட 150 ஏக்கருக்கு மேல் விவசாயம் செய்யும் எஸ்.பி. பழனியாண்டி. தன்னுடைய தோப்பில் நெல், வாழை, மாம்பழம் ஆகியவற்றை பயிரிடுகிறார். இவருடைய 2 மகன்களும்கூட விவசாயத்தில்தான் ஈடுபடுகின்றனர். விவசாயம் இவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியிருக்கிறது. நிறைய நிலங்களுடன், வெளியில் கடன் வாங்காமல் இருப்பவர்களால் மட்டுமே விவசாயத்தை லாபகரமான தொழிலாகச் செய்ய முடியும் என்கிறார். இவரது பண்ணை வீட்டில் ஸ்கார்பியோ உள்ளிட்ட மூன்று கார்கள் நிற்கின்றன.

**கிருஷ்ணப்ப ஜகன்நாத்**
விவசாயி
கர்நாடகம்

பெங்களூரு அருகேயுள்ள பெல்லாந்தூர் கிராம ஊராட்சி முன்னாள் தலைவர் கிருஷ்ணப்ப ஜகன்நாத், சமூக சேவையாளராக மாறி, தனது கிராமம் கணினியை பயன்படுத்துவதை உறுதிப்படுத்தியுள்ளார். தனது மடிக்கணினியை (லேப்டாப்) பயன்படுத்தி அரசுத் தகவல்களையும் நில பட்டாக்களையும் இணைய தளம் வழியாக மற்ற விவசாயிகள் பெறுகிறார்களா என்பதை அவர் உறுதிப்படுத்திக் கொள்கிறார்.

சஞ்சய் ராமச்சந்திரன்



**நகரங்கள் விரிவடைய,** ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் கிராமப்புற சந்தையில் காலடி வைத்துள்ளன. அவற்றுக்கு **நிலத்தை விற்றுவிட்டு,** இதுவரை சினிமாவில் மட்டுமே பார்த்த வாழ்க்கையை விவசாயிகள் வாழத் தொடங்கியுள்ளனர்.





ஏ.பிரபாகர் ராவ்/www.indiatodayimages.com

**பல்லே கங்கா ரெட்டி**
இயக்குநர், ஆந்திர மாநில விதைக் கழகம்

நிஜாமாபாத் மாவட்டம் ஆர்மூர் வட்டாரத்தில் உள்ள விதை நிறுவனங்கள், 1980களில் கேழ்வரகு பயிரிட்டால், திரும்ப வாங்கிக் கொள்வோம் என்ற உத்தரவாதத்தை விவசாயிகளுக்கு கொடுத்தன. அன்று முதல் இப்பகுதியில் தேசிய அளவிலான 70 சதவீத கேழ்வரகு விதை உற்பத்தி செய்யப்பட்டு வடமாநிலங்களில் விற்கப்படுகிறது. இங்கு புதிய விவசாய நுட்பங்களும் தொழில் நுட்பமும் வேலைவாய்ப்பை உருவாக்கியுள்ளன.



சி. சங்கர்/www.indiatodayimages.com

**குடும்பஸ்திரீ**
பெண்கள் திட்டம் கேரளம்

ஆலப்புழையில் உள்ள வடக்கு மராரிகுளம் கிராமத்தில் பெரும்புரட்சி நடந்திருக்கிறது. இதற்குக் காரணமான குடும்பஸ்திரீ திட்டம் மூலம் லட்சக் கணக்கான பெண்கள் தொழில்முனைவு வாய்ப்புகளை பெற்று, பொருளாதார சுதந்திரம் அடைந்திருக்கிறார்கள். பள்ளிக்கல்வியே பெற்றிருந்தாலும், அவர்கள் தொழில் செய்வதற்கான வங்கிக் கடன் பெற இந்தத் திட்டம் உதவுகிறது.

றோம்" என்கிறார் காருண்யாவின் செயலாளர் மாலினி சுதாகரன். அவசர காலத்தில் குறுங்கடன் திட்டமும் அவர்களுக்குக் கைகொடுக்கிறது. ஆசியாவின் மிகப் பெரிய பெண்கள் சுயஉதவிக் குழு, குறுங்கடன் இயக்கமாக இருக்கும் குடும்பஸ்திரீ இயக்கத்தில் 37 லட்சம் ஏழைப் பெண்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். 1999ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தத் திட்டம் மாநிலத்தில் அமல்படுத்தப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டங்களிலேயே மிகப் பெரியது. இதன் மொத்த சேமிப்பு ரூ. 1,191 கோடி, உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன் ரூ. 3,087 கோடி.

குடும்பஸ்திரீ இயக்கத்தின் கீழ் திருவனந்தபுரத்தில் 10 ஆண்டுகளுக்கு முன் 10 இல்லத்தரசிகளால் தொடங்கப்பட்ட டெக்னோவேர்ல்ட் என்ற கணினி மையம் கடந்த ஆண்டு ரூ. 10 லட்சம் லாபம் சம்பாதித்தது. "60 பெண்களுக்கு வேலை கொடுக்கிறோம். ரூ. 27 லட்சம் மதிப்புள்ள புதிய கட்டிடத்தை வாங்கியிருக்கிறோம்" என்கிறார் அதன் செயலாளர் ஷைலா பீவி.

அரசியல் ரீதியில் பிளவுபட்ட கேரளத்தில், குடும்பஸ்திரீ திட்டம் இந்தியாவுக்கு முன்மாதிரி என்று முதல்வர் வி.எஸ். அச்சுதானந்தனும் இது மிகப் பெரிய மௌனப் புரட்சி என்று எதிர்க்கட்சித் தலைவர் உம்மன் சாண்டியும் பாராட்டுகின்றனர். "சாதி, மதம், அரசியல் பிரிவுகளைத் தாண்டி பெண்களை ஒருங்கிணைத்ததுதான் இந்த வெற்றிக்குக் காரணம்" என்று குடும்பஸ்திரீ நிர்வாக இயக்குநர் சாரதா முரளிதரன் தெரிவிக்கிறார். இத்திட்டத்துக்கு யு.என்.டி.பி விருது, சர்வதேச புதியன கண்டறிதலுக்கான சி.ஏ.பி.ஏ.எம் தங்கப் பதக்கம், ஐ.நா சபையின் 'வீ த பீப்பிள்' விருது, யு.என்.சி.எச்.எஸ் அமைப்பின் சிறந்த புதியன கண்டறிதல் விருதும் வழங்கப்பட்டுள்ளன.

இடதுசாரி அரசுகள் மக்கள் நம்பிக்கையை தக்க வைத்துக் கொள்ள முடியாமல் போயிருக்கலாம், ஆனால் கிராம மக்கள் வாழ்க்கையை மாற்றியதில் அவை பொறுப்புடன் செயல்பட்டிருக்கின்றன. இதை மேற்கு வங்கத்திலுள்ள மேமாரி ஊராட்சி அலுவலகம் உறுதி செய்கிறது. இங்கே மே 2009ல் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் 745 பேருக்கு 100 சதவீத வேலை கிடைத்திருக்கிறது. 40,000 பேர் வாழும் இந்த கிராமத்தில் திரையரங்கு, உணவகம், தங்கும் விடுதி, ஷோரூம்கள் இருக்கின்றன. அரிசி, உருளைக்கிழங்கு மூலம் அதிக வருமானம் ஈட்டும் மேமாரி ஊராட்சியில் 12க்கும் மேற்பட்ட அரிசி ஆலைகளும் உருளைக்கிழங்கை கெடாமல் பாதுகாக்க 13 குளிர்பதனக் கிடங்குகளும் உள்ளன. உள்ளூர் நெசவு சங்கத்தில் நிறுவப்பட்டுள்ள நவீன ஜக்கார்ட் நெசவு எந்திரமும் உத்வேகம் அளித்துள்ளது. "நெசவு மூலமாக மட்டும் ஆண்டுதோறும் ரூ. 20 லட்சம் வருமானம் ஈட்டுகிறோம். குளிரூட்டும் நிலையம் இருப்பதால் விவசாயிகளை நாடி ஆந்திரம், ஒரிசா, வங்கதேசத்தில் இருந்து வந்து உருளைக்கிழங்கு வாங்கிச் செல்கிறார்கள்" என்கிறார் முக்தி பால்.

**கிராமப்புற திட்டங்கள்** உள்ளூர் தொழில் தான் இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்றாலும், ஊரக பொருளாதாரம் மற்றும் ஊரக சிந்தனையை தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (என்.ஆர்.இ.ஜி.ஏ) போன்ற திட்டங்கள் மாற்றியிருக்கின்றன. ராஜஸ்தான் மாநிலம் ஆன்வா கிராமத்தின் ஊராட்சித் தலைவர் ஷோபா பரத்வாஜ் இரண்டு ஆண்டுகளுக்கு முன் என்.ஆர்.இ.ஜி.ஏ திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நினைத்தார். தற்போது இந்த கிராமத்தில் மழை நீர் சேகரிப்புக்காக தடுப்பு அணை கட்டப்பட்டு, கிராம மக்களுக்கு வருமானமும் தருகிறது.

என்.ஆர்.இ.ஜி.ஏ திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதி, அடிமட்டத் தலைவர்களை மாறுபட்ட வகையில் சிந்திக்கத் தூண்டுகிறது. சாலைகள், மின் சீர்திருத்தங்கள், கல்வி, நீர் சேகரிப்பு, கணினி கல்வி போன்றவை வறண்ட தூசி நிரம்பிய ராஜஸ்தானை உருமாற்றியுள்ளன. இதற்கெல்லாம் மேலாக, இந்த நிதி சமூக நிலைமையை மேம்படுத்தியுள்ளது. என்.ஆர்.இ.ஜி.ஏ திட்டத்தின் கீழ் குழந்தை



**என்.ஆர்.இ.ஜி.ஏ** திட்டம் கிராமப்புற பொருளாதாரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திஉள்ளது. சாலைகள், தண்ணீர், மின்சாரம், கல்வி போன்ற வசதிகள் மேம்பட்டுள்ளன. **அடிமட்டத் தலைவர்களை** மாறுபட்டு சிந்திக்கவைக்கிறது.



**முக்திபால்**
விவசாயி மேற்குவங்கம்

மாநில அரசு கொடுக்கும் கடன் மூலம் பால் ஒரு டிராக்டரை வாங்கினார். இது அவரது நிலத்தை உழும் திறனை மேம்படுத்தியது. உற்பத்தியை எடுத்துச் செல்லும் வாகனமாகவும் பயன்பட்டது. அவரது வீட்டில் தற்போது குளிர் பதனப் பெட்டி, டிவி, இதர நகர்ப்புற பகட்டு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. தற்போது மற்றொரு டிராக்டர் வாங்க அவர் திட்டமிட்டு வருகிறார்.

விதவைகளுக்கு வேலையும் நிலமும் கிடைக்கிறது.

நாடு முழுவதும் கடந்த 5 ஆண்டுகளில் பிரதமர் ஊரக சாலைத் திட்டத்தின் கீழ் ரூ. 5,400 கோடி செலவு செய்யப்பட்டு போக்குவரத்துத் தொடர்பு மேம்படுத்தப்பட்டு உள்ளது. இதன் காரணமாக உற்பத்திப் பொருட்களும் சேவைகளும் வேகமாக உரிய இடத்துக்குச் செல்ல முடிகிறது. மின்விநியோக நேரம் அதிகரித்ததால் கிராம தொழில்முனைவோரான தையல்காரர்கள், தச்சர்கள், குழாய் பழுதுபார்ப்பவர்கள் மின்கருவிகளை திறன்மிக்க வகையிலும் நீண்ட நேரத்துக்கும் தற்போது பயன்படுத்த முடிகிறது.

தேனியில் என்.ஆர்.இ.ஜி.ஏ திட்டத்தின் கீழ் 100 நாட்கள் வேலை கொடுக்கப்பட்டுள்ளதால், உள்ளூர் இளைஞர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கிறது. இதன் காரணமாக உள்ளூர் சில்லறை விற்பனையாளர்களிடம் மொபைல் போன்களும் ஆடைகளும் அதிகம் விற்பனை ஆகின்றன. "ஒவ்வொருவருக்கும் மொபைல் போன் அத்தியாவசியமாகிவிட்டது. அவற்றின் விற்பனை பெருகிவிட்டது" என்கிறார் உள்ளூர் விற்பனையாளர் செல்வராஜ். கிராமப்புற இந்தியாவில் தனியார் மருத்துவமனைகள், வங்கிகள், சிறு மால்கள், விநியோக மையங்கள் பெருகிவிட்டன.

அதிவேகமாக மாறி வரும் கிராமப்புற இந்தியாவின் சமூக-பொருளாதார நிலையை சரியாகப் புரிந்து கொள்ள பழங்குடிகளின் நிலைமையை அறிவது மிகவும் முக்கியமானது. அறியாமை, வறுமை, வாய்ப்பு மறுக்கப்படுதல் போன்றவற்றால் பல பத்தாண்டுகளாக சுரண்டப்பட்ட அவர்கள்தான் கடைக்கோடி மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். மேற்கு மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஜஹாபுவா மாவட்டம் தேகல்காவோன் கிராமத்தைச் சேர்ந்த கான்டிலால் பரியாவுடன் (25) பேசினால் ஆச்சரியமாக இருக்கும். அவரது பில் பழங்குடிகள் சமூகம் வரலாற்று மாற்றத்தை சந்தித்து வருகிறது. இன்றைக்கு, என்.ஆர்.ஜி.இ.ஏ திட்டத்தின் கீழ் அவர்களது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை கிடைப்பதால், வருமானமும் விருப்பங்களும் மாறிவிட்டன. இன்றைக்கு ஜஹாபுவாவைச் சேர்ந்த 1 - 1.25 லட்சம் பழங்குடிகள் குஜராத், ராஜஸ்தான், மும்பை, கோவா போன்ற மாநிலங்களில் கட்டுமான வேலையில் அதிக சம்பளத்துக்கு வேலை செய்கின்றனர். இளைஞர்கள் மலிவான டெனிம் ஆடைகள், போலி ரேபான் கண்ணாடிகளை அணிந்திருக்கிறார்கள்.

கிராமம் என்று எடுத்துக் கொண்டால், கிராமப்புற இந்தியா அடைந்துள்ள மிகப்பெரிய மாற்றங்களை காலஹண்டியைத் தவிர வேறு எந்த ஊரும் அடையாளப்படுத்த முடியாது. ஒரு காலத்தில் இந்தியாவின் முகத்திலுள்ள பெருங்கறையாகக் கருதப்பட்ட இப்பகுதி நிறைய மாறிவிட்டது (பார்க்க: பெட்டிச் செய்தி). ஒரு காலத்தில் கிராமப்புற இந்தியாவின் அடையாளமாகக் கருதப்பட்ட பட்டினியும் இறப்பின் வாசமும் கொண்ட அந்த நம்பிக்கையிழந்த நாட்கள் இன்று மறக்கப்பட்ட விஷயங்களாகிவிட்டன .

அசோசாம் ஆய்வு ஒன்றின்படி, கிராமப்புற தனிநபர் வருமானம், ஆண்டு மொத்த வளர்ச்சி விகிதம் 2.5 சதவீதத்தில் 1981ல் ரூ. 7,335ல் இருந்து ரூ. 15,396க்கு அதிகரிக்கும் என்று கணித்துள்ளது. கிராமப்புற வருவாய் 2001ஆம் ஆண்டு ரூ. 8,00,000 கோடியில் இருந்து 2011ல் ரூ. 13,00,000 கோடியாக அதிகரிக்கும் என்று கணித்துள்ளது. கிராமப்புற இந்தியா இதே வேகத்தில் சென்றால், இதுதான் எதிர்கால இந்தியாவின் நாடித்துடிப்பாக இருக்கும்.

*அம்ப்ரீஷ் மிஸ்ரா, மாலினி புப்தா, ஷ்யாம்லால் யாதவ், அரவிந்த் சாப்ரா, அபிஜித் தாஸ்குப்தா, பொன். மகாலிங்கம், ஏ. ராம்மோகன் ராவ், ஸ்டீபன் டேவிட், சுபாஷ் மிஸ்ரா, உதய் மாஹூர்க்கர், ரோகித் பரிஹார், ஃபர்சாந்த் அஹமது உதவியுடன்*



சுபிர் ஹல்தர்/www.indiatodayimages.com